செய்தி வெளியீடு எண்: 208 நாள்: 02.04.2013

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (2.4.2013) தலைமைச் செயலகத்தில், சென்னை மாநகரில் வாழும் ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில் சென்னை மாநகராட்சியின் சார்பில் 127 "அம்மா உணவகங்களை" காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள்.

சென்னை மாநகரில் வாழும் ஏழை எளிய மக்கள், அன்றாட கூலி வேலை செய்பவர்கள், ஓட்டுநர்கள், பாரம் தூக்குபவர்கள் என குறைந்த ஊதியத்தில் பணிபுரிபவர்களும் பணி நிமித்தமாக வந்து செல்பவர்களும் பயன் பெறும் வகையில் சென்னை மாநகராட்சியின் சார்பில் அதன் 200 வார்டுகளிலும் சுகாதார மற்றும் தரமான உணவுகளை மலிவு விலையில் வழங்குவதற்காக வார்டுக்கு ஒன்று வீதம் 200 சிற்றுண்டி உணவகங்கள் துவக்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அறிவித்திருந்தார்கள். அதன் அடிப்படையில் முதற்கட்டமாக சென்னை மாநகராட்சியில் உள்ள 15 மண்டலங்களிலும் மண்டலத்திற்கு ஒன்று என்ற அடிப்படையில் 15 மலிவு விலை சிற்றுண்டி உணவகங்களை 19.2.2013 அன்று சென்னை சாந்தோம் நெடுஞ்சாலையில் நடைபெற்ற விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் துவக்கி வைக்கப்பட்ட "அம்மா உணவகங்களில்" மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் காலை 7.00 மணி முதல் 10.00 வரை சிற்றுண்டியாக இட்லி ஒன்று ஒரு ரூபாய்க்கும், மதிய உணவாக நண்பகல் 12.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை சாம்பார் சாதம் 5 ரூபாய்க்கும் தயிர் சாதம் 3 ரூபாய்க்கும் என மலிவு விலையில் தரமானதாகவும் சுகாதாரமான முறையிலும் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இந்த "அம்மா உணவகங்கள்" பொதுமக்களிடம் பெரும் வரவேற்பையும் பேராதரவையும் பெற்று வருகின்றன.

அதன் தொடர்ச்சியாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு 24.02.2013 அன்று 24 வார்டுகளிலும், 6.3.2013 அன்று 34 வார்டுகளிலும், என இதுவரை மொத்தம் 73 "அம்மா உணவகங்கள்" திறந்து வைக்கப்பட்டுள்ளன.

சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 200 வார்டுகளில் மீதமுள்ள 127 வார்டுகளில் “அம்மா உணவகங்களை” மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள். இதன் மூலம் சென்னை மாநகராட்சியில் வார்டுக்கு ஒன்று வீதம் மொத்தம் 200 “அம்மா உணவகங்கள்” இன்று முதல் செயல்படும்.

மதுரை மாநகராட்சியில் பணிபுரிந்து பணிக் காலத்தில் காலமான 347 பணியாளர்களின் வாரிசுதாரர்கள், திருநெல்வேலி மாநகராட்சியில் பணிபுரிந்து பணிக் காலத்தில் காலமான 37 பணியாளர்களின் வாரிசுதாரர்கள், என மொத்தம் 384 வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர், தேர்ச்சி திறன் பணியாளர் (Skilled Worker), தேர்ச்சி திறனற்ற பணியாளர் (Unskilled Worker), துப்புரவு பணியாளர் மற்றும் அலுவலக உதவியாளர் பணிகளுக்கான பணி நியமன ஆணைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று வழங்கினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடமிருந்து பணி நியமன ஆணைகளை பெற்றுக் கொண்ட பணியாளர்கள் தங்களது நெஞ்சார்ந்த நன்றியினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொண்டார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர், சென்னை மாநகராட்சி மேயர், மதுரை மாநகராட்சி மேயர், திருநெல்வேலி மாநகராட்சி மேயர், தலைமைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலாளர், சென்னை மாநகராட்சி முதன்மைச் செயலாளர் / ஆணையர், மதுரை மாநகராட்சி ஆணையர், திருநெல்வேலி மாநகராட்சி ஆணையர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.
நாள்: 2.4.2013